பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 30 சனிக்கிழமை 15.08.2020 கதிர் 149

## கைதிகளைப் பார்க்க இன்று முதல் அனுமதி

கொழும்பு, ஓக 15

சிறைக் கைதிகளைப் பார்வையிட வாரத்துக்கு ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சிறைச் சாலை ஆணையாளர்துஷார உப்புல்தெனியகூறினார்.

இதன்போது கைதிகளுக்குச் சுகாதார பாதுகாப்புப் பொருள்களைத்

2

# தமிழரசின் பின்னடைவை ஆராய சுயாதீன ஐவர் குழு

## இன்று நடந்த அரசியல் குழுவின் திருமலைக் கூட்டத்தில் திட்டம்

திருகோணமலை, ஓகஸ்ட் 15

கடந்த பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏற்பட்ட பின்னடைவுகளை விரிவாக - நடுநிலையாக - பக்கம் சாராமல் - ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கட்சி சார்பற்ற ஐந்து பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமிப்பது என்றும், அந்தக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து அதனடிப்படையில் அடுத்த கட்டம் குறித்துத் தீர்மானிப்பது என்றும் இன்று திருகோணமலையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு தீர்மானித்தது.

இன்று நண்பகல் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு இரா. சம்பந்தன் தலைமை வகித்தார். பெரும்பாலும் அரசியல் குழு உறுப்பினர்கள் எல்லோரும் பங்குபற்றினர். எதிர்பார்த்த குழப்பம் ஏதும் கூட்டத்தில் இடம்பெறவில்லை. கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஆரம்பத்தில் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் குறித்து உரையாற்றினார்.

2

## மணியை நீக்கும் தீர்மானத்தை அவருக்கு அறிவித்துவிட்டோம்

### சைக்கிள் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்தும், பேச்சாளர் பதவியிலிருந்தும் மணிவண்ணனை நீக்கும் முடிவை அவருக்கு அனுப்பி வைத்துள்ளோம். அதைப் படித்து விட்டு அவர் தனது நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், மேலதிகமாக எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்.

2

## 12 ஆயிரம் பட்டதாரிகள் புறக்கணிப்பு

கொழும்பு, ஓக 15

செப்ரெம்பர் 2 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவைக்குள் இணைக்கும் திட்டத்தில் சுமார் 12 ஆயிரம் பட்டதாரிகள் இணைக்கப்படவில்லை என்று பட்டதாரிகளுக்கான தேசிய மையம் குற்றம்சாட்டியுள்ளது.

2

## தேசியப்பட்டியல் விடயத்தில் எவ்வித மாற்றமும் இல்லை!

### திருகோணமலையில் மாவையை அருகில் வைத்துக்கொண்டு சம்பந்தன் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இருப்பினும் அந்த நியமனத்தில் எடுக்கப்பட்ட நடைமுறை கள் சம்பந்தமாக தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேலும் பரிசீலனை செய்யும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்

2

## 3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதி ரூ. 68 லட்சம் மட்டுமே காப்புறுதி

### திருத்தியமைக்க முடியாத நிலையில் யாழ். மாநகரசபை தீயணைப்பு வாகனம்



யாழ்ப்பாணம், ஓக 16

யாழ். மாநகரசபையின்தீயணைப்பு வாகனத்துக்குத் தவறான காப்புறுதி செய்தமை தொடர்பிலும் அதனால் தற்போதுள்ள நிலைமை தொடர்பாகவும் உரிய விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 2014ஆம் ஆண்டு 3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதிக்கு புதிதாக கிடைத்த தீயணைப்பு வாகனத்துக்கு வெறும் 68 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியிடப்பட்டு வருடாந்தம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா காப்புறுதி செலுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் அந்த வாகனம் 2020-06-16 அன்று விபத்திற்குள்ளாகி முழுமையாகச் சேதம் அடைந்துள்ளது. இதனைத் திருத்தக் கணிப்பிடும் பெறுமதி ஒரு கோடியைத் தாண்டும் என கருதப்படுகின்றது.

2



## முள்ளிவாய்க்காலில் முன்னணி உறுதியுரை

முல்லைத்தீவு, ஓக 15

பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இன்று முள்ளிவாய்க்காலில் உறுதியுரை எடுத்துக்கொண்டனர்.

இம்முறை தேர்தலில் வென்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்கள் தேசியக்

2

## இந்தியாவின் சுதந்திர தினம் இன்று யாழ்ப்பாணத்திலும்



யாழ்ப்பாணம், ஓக 15

இந்தியாவின் 74ஆவது சுதந்திர தினத்தை ஒட்டிய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இன்று நடைபெற்றது.

காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதன் பின்னர் இந்திய ஜனாதிபதியின் உரை அங்கு வாசிக்கப்பட்டது.

இசை நிகழ்வுகளும், மரநடுகைகளும் அங்கு இடம்பெற்றன.

## கடலட்டை பிடித்த மூன்று பேர் பருத்தித்துறைக் கடலில் கைது



சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகளைப் பருத்தித்துறைக்கு 03 கடல்மைல் தொலைவில் உள்ள கடல் பகுதியில் கொண்டு சென்ற 3 பேரை ஒரு டிங்கி படகுடன் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனால் ஒரு தொகை நிதி சபையின் பொறுப்பிலேயே செலவிடப்பட வேண்டிய நிலை அதிகாரிகளின்

## முள்ளிவாய்க்காலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் உறுதியுரை எடுத்திருந்தார்.

இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் உறுதியுரை ஏற்பு நிகழ்வை முள்ளிவாய்க்காலில் நிகழ்த்துவதாக அறிவித்திருந்தனர். அவர்கள் இன்று ஆதரவாளர்களுடன் முள்ளிவாய்க்கால் சென்றனர்.

அங்கு முள்ளிவாய்க்காவில் உள்ள சுடர் ஏற்றும் தூபியில் சுடரேற்றி வணக்கம் செலுத்தினர். அதன் பின் னர் சத்தியப்பிரமாணமும் இடம்பெற்றது.

## கடலட்டை பிடித்த ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை கடல் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைத் தடுப்பதற்காக கடற்படை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி வடக்கு கடற்படை கட்டளையால் பருத்தித்துறை கடல் பகுதியில் மேற்கொண்டுள்ள ஒரு நடவடிக்கையின் போது அனுமதிப் பத்திரம் இல்லாமல் பிடித்த 4,010 கடல் அட்டைகள் கொண்ட டிங்கி படகு ஒன்று, மீன்பிடிபொருள்கள் ஆகியவற்றுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 19, 21 மற்றும் 23 வயதுடைய மூன்று சந்தேக நபர்களும், பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களுடன், மேலதிகவிசாரணைகளுக்காக யாழ்ப்பாணம், மீன்வள மற்றும் நீர்வளத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## தேசியப்பட்டியல் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் திருகோணமலையில் சம்பந்தனின் இல்லத்தில் அவரின் தலைமையில் இன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியால் நியமனம் செய்யப்பட்ட தேசியப் பட்டியல் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது. வழங்கப்பட்ட நியமனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

நியமனம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடைமுறைகள் சம்பந்தமாக இம்மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் வவுனியாவில் கூடவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் மேலதிகமாகப் பரிசீலனை செய்யப்படும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அரசியல் குழுக் கூட்டத்தில் அரசியல் குழு உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கி.துரைராஜசிங்கம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சி.வி.கே.சிவஞானம் மற்றும் கே.வி.தவராசா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் அம்பாறை மாட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளருமான தவராசா கலையரசனுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தவறினால் ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது .

இந்த நிலையில் கடந்த 2020 - 06 - 16 அன்று விபத்திற்குள்ளான வாகனமும் இழுத்து வரப்பட்டு சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, அந்த வாகனம் சபைக்குக் கிடைத்து காப்புறுதி செய்யப்பட்ட காலத்தில் சபை இயங்கியுள்ளது. இவ்வாறு தவறான காப்புறுதி செய்யப்பட்ட காலத்தில் மூன்று ஆணையாளர்கள் பதவி வகித்த அதேநேரம் 5 ஆண்டுகள் புதிய வாகனத்துக்கு அதே பெறுமதியிலும் அதன்பின்னர் பெறுமதி மதிப்பிடப்படவேண்டும் என்ற விதிமுறையும் 2019 முதல் மீறப்பட்டமையால் இதனைக் கண்டுகொள்ள முடியவில்லை என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே இந்த விடயம் தொடர்பில் உடன் ஆராய்ந்து உரிய நிர்வாக, நிதி நடைமுறைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொண்டு இதற்கான உரிய தீர்வை முன்வைக்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்கு யாழ். மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் கொண்டு சென்றார்.

இவற்றின் அடிப்படையிலேயே பிரதம செயலாளர் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

## 12 ஆயிரம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேலையில்லாப் பட்டதாரிகள் அனைவரும் இந்தத் திட்டத்தின் கீழ் அரச சேவைக்குள் இணைக்கப்படவேண்டும் என்று பட்டதாரிகளுக்கான தேசிய மையத்தின் இணைப்பாளர் சந்தன சூரியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதில் எமக்கு எந்தக் கவலையும் இல்லை. எனினும் 12 ஆயிரம் பட்டதாரிகளும் தகுதி வாய்ந்தவர்கள். ஆனால் அவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லையென்று அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளோம். சமமான தகுதிகளில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளை அரசு தேர்ந்தெடுக்கும்போது 12 ஆயிரம் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

எனவே இந்தத் திட்டத்தில் வேலையில்லாத அனைத்து பட்டதாரிகளையும் அரச சேவைக்குள் சேர்க்கவேண்டும் - என்றார்.

## 3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதி ..........

அந்த நியமனம் அம்பாறையின் கலையரசனுக்கு வழங்கியது தவறல்ல என்று கூறிய அவர், ஆனால் அது வழங்கிய முறைமை தவறு என்று குறை கூறினார். அவரது குற்றச்சாட்டு செயலாளர் மீது காட்டமாக இருந்தது. ஆனால் செயலாளர் துரைராஜசிங்கம் அதற்குப் பதிலளித்து, மோதலில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொண்டர்.

அம்பாறைக்கு அல்லது மகளிர் பிரதிநிதி ஒருவருக்கு அது கிட்டுவதுதான் பொருத்தம் என்று தாம் கருதினார் என்றும், எனினும் ஆதரவாளர்களும் கட்சிப் பிரமுகர்களும், அதனைச் பெற்றுக் கொள்ளும்படி தம்மை வற்புறுத்தியமையினால் தாம் அதற்குப் இணங்கினார் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். இப்போது அந்தப் பதவி அம்பாறையின் கலையரசனுக்கு வழங்கப்பட்டு விட்டது. இனிமேல் அதைக் குழப்பவேண்டாம். இந்தவிடயத்தை இன்று இங்கு பேசுவதை நிறுத்துவோம். 29 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் கட்சியின் மத்திய குழுக் டைட்டத்தில் இதனை பெறும் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இதனை ஆராய்வோம் என்றார் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா.

அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். கட்சியின் பின்னடைவு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழு ஒன்றை அமைப்போர் என்றார் அவர்.

அந்தக் குழுவுக்கு கட்சி சாராத பொதுப் பிரமுகர்களை நியமிப்பதே பொருத்தமானது என சுமந்திரன் தெரிவித்த யோசனையை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். பொருத்தமான பிரமுகர்களை யோசித்து, ஆராய்ந்து பிரேரிக்கும்படி ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ளப்பட்டவில்லை.

கட்சியின் தோல்விக்கு கட்சியின் பெயரில் இயங்கிய ஓர் ஊடகமும் அதன் நிர்வாகியான வேட்பாளருமே காரணம் என்று கூட்டத்தில் பலரும் போட்டுப் பிடித்தனர். அவரினதும் ஆதரவாளர்கள் நடந்து கொண்ட விதம் குறித்தும் மிக மோசமாகக் கூட்டத்தில் விமர்சிக்கப்பட்டது. பலரும் அதற்கு எதிராகக் கருத்து வெளியிடவில்லை. கூட்டத்தின் தலைவர் இரா.சம்பந்தனும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராவும் இக்குற்றச்சாட்டுக்களை எதிர்த்து ஏதும் கூறாமல் அமைதியாக செவிமடுத்தனர்.

## மணியை நீக்கும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி செலுத்தினர். பின்னர் ஊடகவியலாளர்களிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பேசும் போது,

கடந்த 13ஆம் திகதி இரவு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு கூடி ஒரு சில முடிவுகள் எடுக்கப்பட்டன. விசேடமாக மணிவண்ணன் தொடர்பாகப் பேசி சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த முடிவுகளை நாங்கள் எழுத்து மூலமாக மணிவண்ணனுக்கு மின்னஞ்சல் ஊடாக நேற்றிரவு அனுப்பி வைத்தோம். அந்த அறிவித்தல் பதிவுத் தபாலில் இன்று அனுப்பி வைக்கப்படும்.

அதைப் படித்து விட்டு அவர் தனது நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், மேலதிகமாக எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம் - என்றார்.

எனினும், கடைசிவரை மணிவண்ணன் மீது ஏன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு அவர் பதிலளிக்கவில்லை.

## கைதிகளைப் பார்க்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தவிரவேறுஎவற்றையும்பெற்றுக்கொடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெலிக்கடை சிறைச்சாலை கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து கடந்த மாதம் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகளை பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

ஏனைய சிறைச்சாலைகளிலும் இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட வாய்ப்பிருப்பதால், அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளை பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய உரிய சுகாதார விதிமுறைகளை மேற் கொண்டு விரைவில் கைதிகளை பார்வையிடுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

அதற்கமைய இன்று சனிக்கிழமை முதல் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இதன்போது கைதியொருவரை வாரத்திற்கு ஒருவர் மாத்திரமே பார்வையிட முடியும். இந்நிலையில் இவ்வாறு பார்வையிட வருபவர்கள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்திருக்க வேண்டும் - என்றார்.





இயற்கை முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட காய்ப்பதற்கு தயாராக உள்ள மரக்கறிக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

- சரியான அளவில் இயற்கைப் பசளைகள் இடப்பட்டு வளர் பைகளில் (Grow Bag)பராமரிக்கப்பட்டவை.
- வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம் மற்றும் குறைந்தளவு இடவசதி உள்ளவர்களுக்கு பொருத்தமானது.

உங்கள் தோட்டத்தை நாங்களே தருகிறோம்....
நீர் ஊற்றிப் பராமரித்தால் போதுமானது .....



551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 4927 782 / 076 740 3814

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மைத்திரியால் வந்த அழிவு

**தமது தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா உருவாக்கி அவரது உதிரம் மூலம் ஸ்தாபித்த – தமது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நிலை நிறுத்தப்பட்ட – தன்னால் மீண்டும் அதிகாரப் பீடத்துக்கு வலுவாகக் கொண்டு வரப்பட்ட – சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறித்துப் பெரிதும் விசனம் தெரிவித்திருக்கின்றார் சந்திரிகா குமாரதுங்க.**

**“மஹிந்த ராஜபக்ஷவினால் கட்சி நுட்பமான முறையில் அழிக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன அதனை மிகவும் இழிவான முறையில் முன்னெடுத்து நடைமுறைப்படுத்தினார்.”**

**– இப்படி முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க, தனது பெற்றோரினால் உருவாக்கப்பட்ட பெரும் கட்சி செயலிழந்து போகும் நிலைமை ஏற்பட்டதற்குத் தமக்குப் பின்னால் வந்த இரண்டு ஜனாதிபதிகளையும் குற்றம் சுமத்துகின்றார்.**

**நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமை ஏற்பட்டமையை அடுத்து அதனை பதினாறு ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியே தன்வசம் வைத்துக் கோலோச்சியது.**

**அத்தரப்பிடமிருந்து அந்த அதிகாரத்தைப் பறிக்கும் மக்கள் செல்வாக்கை சுதந்திரக் கட்சிக்குப் பெற்றுக் கொடுத்தவர் சந்திரிகாதான்.**

**யுத்த மோகம் சூழ்ந்திருந்த இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் ‘சமாதான தேவதையாக’ அவரைப் பெருவரவேற்புடன் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியது இலங்கை. இந்த நாட்டில் இன முரண்பாட்டால் எதிரும் புதிருமாக நின்ற சிங்கள – தமிழ் தேசிய இனங்கள் சமாதான எதிர்பார்ப்புடன் ஒன்றுபட்டு அவரை ஆட்சிப் பீடத்துக்கு அழைத்து வந்தன.**

**ஆனால், சமாதான தேவதை என்ற முக மூடியுடன் அதிகார பீடம் ஏறிய சந்திரிகா அம்மையார் ‘போர்ச் சூர்ப்பனகை’ ஆகத் தமது உண்மை முகத்தைக் காட்டியபோது பேரழிவு தரும் கொடூரப் போருக்குள் நாடு சிக்கிக் கொண்டது.**

**ஆனாலும், தமக்குப்பின்னர்பதவியேற்கும்தமது கட்சிக்காரர்கள் தமது குடும்பக் கட்சியை மேலும் ஸ்திரப்படுத்தி உறுதியாக நிலை நிறுத்துவர் என எதிர்பார்த்த சந்திரிகாவுக்கு, அவர்கள் இருவரும் சேர்ந்து கட்சியை சிதறடித்துக் குட்டிச் சுவராக்கியமை பெரும் வேதனையை அளித்திருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.**

**சந்திரிகா சுட்டிக் காட்டியிருக்கின்றமைமைபோல –**

**∗ இந்த நாட்டின் இரண்டு முக்கிய கட்சிகள் அழிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி துண்டு துண்டாக உடைந்து போயுள்ளது.**

**∗ சுதந்திரக் கட்சியின் இன்றைய நிலைமை மிகமிகக் கேவலமானது.**

**– இந்த இரண்டு விடயங்களும் உண்மைதான்.**

***“சு.கவை நான் இப்போது தேடி வருகிறேன். சிறிசேன கட்சியை அழித்து விட்டார். கட்சியை எண்ணி நான் வருத்தம் அடைகிறேன். அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. சிறிசேன மோசமான முறையில் கட்சியை அழித்து விட்டார். அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் கட்சிக்குக் கேவலமான முறையில் சில அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன. கட்சியின் தலைவருக்கு எதுவும் இல்லை. செயலாளருக்கு வெறும் 'பற்றிக்' அமைச்சு. அதன் கீழ் எதுவும் இல்லை”*** **என்று சந்திரிகா வேதனை தெரிவித்திருக்கின்றார்.**

**சந்திரிகா குறை கூறுகின்றமை போல, சு.கவை இந்த இழி நிலைக்குக் கொண்டு வந்தது மைத்திரிபால சிறிசேனவின் பதவி ஆசைதான். அதனை ஏற்கனவே நாமே இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.**

**2014 கடைசியில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, முதல் நாள் இரவு கட்சித் தலைவரும், ஜனாதிபதியும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட இருந்தவருமான மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து இருந்து அப்பம் சாப்பிட்டு விட்டு, அடுத்த நாள் அப்போதைய பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தன்னை அறிவித்தார். அதையடுத்து சு.க. பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அவர் இராஜினாமாச் செய்தார். ஆனால் சு.கவின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து அவர் விலகவில்லை. எதிரணியின் சார்பில் பொதுச் சின்னத்தில் – அன்னத்தில் – ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அவரைக் கட்சியிலிருந்து விலக்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சு.கவினர் நடவடிக்கை எடுக்கவுமில்லை. இது மைத்திரிக்கு வாய்ப்பாகப் போய் விட்டது.**

**சந்திரிகா கட்சித் தலைவராக இருந்தபோது 2015 இல் ஜனாதிபதியானார் மஹிந்த ராஜபக்ஷ. அச்சமயம் சு.க. தலைமைப் பதவியை சந்திரிகாவிடமிருந்து தாம் பிடுங்கி எடுப்பதற்காக ஒரு திருத்தத்தை சு.கவின் யாப்புக்குக் கொண்டு வந்தார் மஹிந்தர். அதன்படி, சு.க உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே கட்சியின் தலைவர் என்று பிரகடனப்படுத்தியது அந்த யாப்புத் திருத்தம்.**

**அதை வைத்து சந்திரிகாவிடமிருந்து சு.க. தலைவர் பதவியை ஜனாதிபதி மஹிந்தர் பறித்தார். அதையே வைத்து, சு.கவின் அடிப்படை உறுப்புரிமையையிலிருந்து நீக்கப்படாத ஜனாதிபதி மைத்திரியும், மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து 2015 இல் கட்சித் தலைமையைப் பறித்தார்.**

**அந்த நடவடிக்கையே சு.கவில் எம்.பியாக இருந்தபடியே பொதுஜன பெரமுனவை ராஜபக்ஷக்கள் உருவாக்கவும், சு.கவின் தலைமைப் பதவியைப் பலவந்தமாகக் கைப்பற்றி வைத்தபடி அது அழிந்து போக மைத்திரிபால பார்த்திருக்கவும் வழி செய்தது என்பதே கடந்துபோன சரித்திரமாகும்.**

## வாக்கு எண்ணும் நிலையத்தில் தாக்குதல் மனித உரிமை ஆணையத்தில் முறைப்பாடு

யாழ். மத்திய கல்லூரியில் பொதுத் தேர்தல் வாக்குகள் எண்ணும் நிலையத்தில் முடிவுகளுக்காகக் காத்திருந்த கட்சிகளின் ஆதரவாளர்களை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் தாக்கினர் என 3 பேர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அவர்களில் இருவர் சிறப்பு அதிரடிப் படையினருக்கு எதிராகவும் ஒருவர் பொலிஸாருக்கு எதிராகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பாக பொலிஸாரின் தாக்குதலில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் தவராசா துவாரகன், தன்னை பொலிஸார் சித்திரவதை செய்தனர் என முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு முறைபாடு அவரால் பதிவு செயயப்பட்டள்ளது.

அதனையடுத்து, தவராசா துவாரகன் பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் கோரியிருக்கின்றது.

இந்த நிலையில் வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் (இலங்கை தமிழ் அரசுக் கட்சி), முன்னாள் விடுதலைப் புலிகள் போராளி தனுபன் (இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்) ஆகியோரும் விசேட அதிரடிப் படையினருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். இதுதொடர்பான விரிவான செய்தி இன்றைய காலைக்கதிரின் காலைப் பதிப்பின் முதலாவது பக்கத்தில் விரிவாக வெளிவந்துள்ளது.

## மன்னாரில் கிடந்த பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில்!

மன்னார் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்தி பாத்தியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் – சௌத்பார் புகையிரத நிலைய பிரதான பாதை அருகில் காணப்படும் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்தி பாத்தியில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தேகத்திற்கு இடமான நிலையில் பெண்ணொருவரின் சடலம் காணப்பட்டமையைத் தொடர்ந்து மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த மன்னார் பொலிஸார், சடலத்தைப் பார்வையிட்ட நிலையில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுசென்றனர்.

இதன் பின்னர் மன்னார் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் அந்தப் பகுதிக்குச் சென்று சடலத்தை கண்டெடுத்தனர்.

இதன்போது பெண்ணின் உடலில் பலத்த காயங்கள் காணப்பட்டதுடன், இழுத்து செல்லப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன எனவும் விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சடலம் காணப்பட்ட இடத்தில் இருந்து ஆண் ஒருவரின் பாதணி, கையுறை உட்பட சில தடையப் பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்குறித்த பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட சடலம் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஆஸ்திரேலியாவால் இலங்கைக்கு சுகாதார உபகரணங்கள் நன்கொடை!




ஆஸ்திரேலியா 23.4 மில்லியன் ரூபாய் பெறுமதியான சுகாதார உபகரணங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியா பாதுகாப்புத் திணைக்களம் இந்த சுகாதார உபகரணங்களை இலங்கை கடற்படைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இதன்போது இலங்கைக்கான ஆஸ்திரேலியஉயர்ஸ்தானிகராலயத்தின்பாதுகாப்பு ஆலோசகர் ஊடாக இந்தப் பொருள்கள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகே தென்னவிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 12 ஆயிரம் பாதுகாப்பு ஆடைகள் மற்றும் 2 இலட்சம் கையுறைகள் உள்ளிட்ட மேலும் பல சுகாதார உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்ஸுடன் மோதியது ஓட்டோ 5 வயது குழந்தை பலி; நால்வர் காயம்!

குருநாகல், ஓக.15

குருநாகல் – கட்டுபொத, கல்வெவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 05 வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கட்டுபொத நோக்கி பயணித்த ஓட்டோவுக்கு முன்பாக நாய் ஒன்று வீதியில் பாய்ந்ததால், கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ, தனியார் பஸ் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது ஓட்டோவின் பின்னால் அமர்ந்து சென்ற குழந்தை படுகாயம் அடைந்த நிலையில் கட்டுபொத வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மேலும் 4 பேர் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பாக பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கட்டுபொத பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியா விரைவில் தன்னிறைவு பெறும் சுதந்திரதின நிகழ்வில் பிரதமர் உறுதி!

நாடு தன்னிறைவு பெறுவதே ஒவ்வொரு இந்தியனின் தாரக மந்திரம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

74 ஆவது சுதந்திர தினத்தையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது சுதந்திர தின வாழ்த்துகள்.

பல லட்சம் பேரின் தியாகத்தால் உருவானது இந்தியாவின் சுதந்திரம். விடுதலைக்காகத் தியாகங்களைச் செய்தவர்களை இன்று நினைவுகூர்வோம்.

இன்று கண்ணெதிரே சின்ன சின்ன குழந்தைகளைக் காண முடியவில்லை. கொரோனா அனைவரையும் வீட்டுக்குள் தடுத்து விட்டது. கொரோனாவுக்கு எதிராகப் போராடும் அனைவரையும் பாராட்டுவோம். பலர் தங்கள் உயிரையும் பறிகொடுத்துள்ளனர்



130 கோடி மக்களின் சகிப்புத்தன்மையும் உறுதியும் கொரோனாவை வெல்லும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாட்டின் பல பகுதிகளில் மக்கள் மழை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரே நாடு என்ற ஒற்றுமையுணர்வுடன் நாம் சவால்களை வெல்வோம்.

அடுத்த ஆண்டு நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவோம். எதிர்காலத்திற்கான புதிய கண்ணோட்டம் வேண்டும். புதிய சபதங்களையும் நாம் ஏற்க வேண்டும்

பிரிட்டி; ஆட்சியாளர்கள் இந்தியாவை என்றும் நிரந்தரமாக ஆள கனவு கண்டார்கள். இந்தியாவின் பலம் அதன் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டில் உள்ளது. பிரிட்டி; ஆட்சியாளர்கள் நமது ஒற்றுமையுணர்வைக் குறைவாக மதிப்பிட்டனர். பிரிட்டனின் விரிவாக்க கனவை இந்தியா ஒற்றுமையால் முறியடித்தது.

இந்தியர்கள் ஒருபோதும் தியாகத்திற்கு அஞ்சுபவர்கள் அல்லர். கொரோனாவை வெல்லவும் 130 கோடி இந்தியர்கள் உறுதி பூண்டுள்ளனர்.

சொந்தக் காலில் நிற்கும்படி பிள்ளைகளுக்கு பெற்றோர் அறிவுரை கூறுவர். இன்று நாம் சுயசார்புடன் சொந்தக் காலில் நிற்கும் வலிமை பெற்றுள்ளோம். சுயசார்பு என்பதே ஒவ்வொரு இந்தியரின் தாரக மந்திரமாக உள்ளது.

உலகம் இந்தியாவிடம் நிறைய எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. இந்தியா தனது ஆன்மபலத்தால் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது

இன்றைய உலக நாடுகள் ஒன்றையொன்றை சார்ந்து நிற்கும் நிலை உள்ளது. நமது சுயசார்பால் நாம் உலகிற்கே உதவியாக இருக்க முடியும்

இந்தியா உலகைத் தலைமை தாங்கி வழிநடத்திச் செல்ல வேண்டும். இந்திய விவசாயிகளுக்கு எனது நன்றி. வேளாண் துறையை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாயம் முதல் விண்வெளி ஆய்வு வரை இந்தியா முன்னேறி வருகிறது. திறன் மேம்பாட்டில் நாம் கவனம் செலுத்த வேண்டும். படைப்பாற்றலை வளர்க்க வேண்டும்.

கொரோனா வைரஸை எதிர்கொள்ள நமது இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகளைத் தந்தனர். உலகத்தால் உதவ முடியாத நிலையில் நமக்கான மருத்துவ சாதனங்களை நாமே உருவாக்கிக் கொண்டோம். உள்நாட்டு உற்பத்தியை நாம் அதிகரிக்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் 74 ஆவது சுதந்திரதினம் இன்றாகும்!



இந்திய சுதந்திர தின விழா இன்று (சனிக்கிழமை) நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. வழக்கமாக சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்படும். இந்த ஆண்டு, கொரோனா பரவல் காரணமாக பல்வேறு கட்டுப்பாடுகளுடன் விழா கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் சுதந்திர தின விழா தொடக்கமாக டெல்லியில் உள்ள காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, செங்கோட்டையில் முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் மோடி பார்வையிட்டார்.

அதன் பின்னர் 74 ஆவது சுதந்திர தினத்தை யொட்டி டெல்லி செங்கோட்டையில் ஏழாவது முறையாக பிரதமர் மோடி தேசியக்கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள், முப் படைத் தளபதிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் உள்ளிட்டோர் பங்கேற் றுள்ளனர்.

மொத்தம் 4 ஆயிரம் பேருக்கு மட்டுமே இந்த விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. அழைப்பு இல்லாதவர்களுக்கு விழா அரங்கில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சுதந்தின தின விழாவை முன்னிட்டு டெல்லியைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விமானங்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டு போக்குவரத்திலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. செங்கோட்டையில் கமாண்டோப் படை உள்ளிட்ட பல அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைத்துள்ளனர்.

மெட்டல் டிடெக்டர் கருவிகள், கண்காணிப்பு கெமராக்கள் மூலம் தீவிரமான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து விழா விருந்தினர்களும் முகக்கவசம் அணியும்படியும் சமூக இடைவெளியைப் பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## அப்துல்கலாம், கல்பனா சால்வா விருதுகள் தமிழகத்தின் சாதனையாளர்களுக்கு வழங்கல்!

இந்தியாவின் 74 ஆவது சுதந்திர தின விழா இன்று (சனிக்கிழமை) கொண்டாடப்படும் நிலையில் சமூக செயல்பாடுகள் மற்றும் சாதனைகளுக்கான தமிழக அரசின் விருதுகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வழங்கியுள்ளார்.

இதற்கமைய பெரம்பலூரில் நீரில் மூழ்கிய இளைஞர்களை காப்பாற்றிய வீர செயலுக்காக பெரம்பலூரை சேர்ந்த தமிழ்செல்வி, முத்தம்மாள், ஆனந்தவள்ளி ஆகியோருக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் அறக்கட்டளை மூலம் 365 மாணவர்களின் கல்விக்கு உதவிய செல்வகுமார் என்பவருக்கு ஏபிஜே அப்துல்கலாம் விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர கொரோனா காலத்தில் சிறப்பாகச் செயலாற்றிய முன்கள வீரர்கள் மற்றும் சிறந்த பங்களிப்பை அளித்த பொலிஸாருக்கும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## உனக்காகக் காத்திருக்கின்றேன் எழுந்து வா பாலு! – இளையராஜா



பாடகர் எஸ்.பி.பி.யின் உடல் நிலை அச்சப்படும் அளவிற்கு மோசமாக இல்லை நலமாகவே இருக்கிறார் என எஸ்.பி.பியின் மகன் தெரிவித்தது அவரது ரசிகர்களுக்கு சிறிது ஆறுதலாக இருந்தது.

இந்நிலையில், நடிகர் மனோபாலா ருவிட்டரில் வெளியிட்டுள்ள பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் - சிகிச்சை பெற்று வரும் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது.

இதனைத்தொடர்ந்து, பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மனைவி சாவித்திரிக்கும் கொரோனா தொற்று உறுதியானது. கொரோனாவால் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஐ.சி.யூ.வில் உள்ள நிலையில் அவரது மனைவிக்கும் தொற்று உறுதியானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் நண்பரும் இசையமைப்பாளருமான இளையராஜா ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். இசையைவிட்டு ஸ்வரங்கள் பிரிந்து போகாததைப் போல் உனக்கும் எனக்கும் இடையேயான நட்பு.

நாம் சண்டை போட்டாலும் நட்பாகவே இருந்தோம். அது உனக்கும் எனக்கும் தெரியும். பாலு எழுந்து வா.... உனக்காக காத்திருக்கிறேன் என உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவுக்கு எதிராக கோவாக்ஸின் தடுப்பூசி!

கொரோனா நோய்த்தொற்றுக்கு எதிராக இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள கோவாக்சின் தடுப்பூசி பாதுகாப்பானது என்பது முதற்கட்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் தேசிய தீநுண்மி ஆய்வு நிறுவனத்துடன் பாரத் பயோடெக் நிறுவனம் இணைந்து கோவாக்சின் தடுப்பூசியைத் தயாரித்துள்ளது. இதனை மனிதர்களுக்கு செலுத்தி நடத்தப்படும் முதற்கட்ட சோதனை நாட்டில் 12 இடங்களில் நடைபெற்று வருகிறது.

375 தன்னார்வலர்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்தப் பரிசோதனையில் கோவாக்சின் பாதுகாப்பானது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள தன்னார்வலர்களுக்கு எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை என பிஜிஐ மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பரிசோதனை பணிகளுக்கு தலைமையேற்றுள்ள மருத்துவர் சவிதா வர்மா தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய நிலையில், இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது எனவும் அவர் கூறியுள்ளார்.

## எஸ்.பிக்கு மருத்துவ உதவிகளை தமிழக அரசு செய்வதற்குத் தயார்!

இந்தியாவின் பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்யத் தயாராக உள்ளதாகத் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டநிலையில், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது சிகிச்சை பெற்று வரும் எஸ்.பி.பியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அச்சப்படும் நிலை இல்லை என்றும் அவரது மகன் எஸ்.பி.பி. சரண் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, எஸ்.பி.பி உடல் நிலை பூரண நலம்பெறப் பிரார்த்தனை செய்வதாக இளைய ராஜா உள்ளிட்ட பிரபலங்கள் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து, பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு மருத்துவ உதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் விஜயபாஸ்கர் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். குறித்த பதிவில், 'எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்ய அரசு தயாராக உள்ளது.

எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் உடல்நிலை குறித்து அவரது மகன் எஸ்.பி.பி.சரண் மற்றும் எம்.ஜி.எம் மருத்துவமனையின் எம்.டி.யிடம் விசாரித்தேன். அவர் விரைவாக குணமடைய பிரார்த்திக்கின்றேன்' எனப் பதிவிட்டுள்ளார்.

# பெலாரஸ் தேர்தல்: நாடுகடத்தப்பட்ட தலைவர் வார இறுதியில் அமைதிப் போராட்ட ஏற்பாடு!

நாடுகடத்தப்பட்ட பெலாரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்வெட்லானா டிகானோவ்ஸ்காயா நாடு முழுவதும் அமைதியான பேரணிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்,

சர்ச்சைக்குரிய தேர்தலை அடுத்து அவர் லித்துவேனியாவுக்கு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட நிலையில் அமைதி பேரணிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

1994 முதல் பெலாரஸை அலெக்சாண்டர் லுகாஜன்கோ ஆண்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலை அடுத்து அவர் விலக வேண்டும் என்று நாடு முழுவதும் எதிர்ப்பு போரட்டங்கள் இடம்பெற்றன.

தேர்தலை அடுத்து சுமார் 6,700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் பாதுகாப்பு அதிகாரிகளால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் அலெக்சாண்டர் லுகாஜன்கோ 80.1 வீத வாக்குகளையும், ஸ்வெட்லானா டிகானோவ்ஸ்காயா 10.12 வீத வாக்குகளையும் பெற்றனர் என மத்திய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஸ்வெட்லானா டிகானோவ்ஸ்கயா நாடுகடத்தப்படுவதற்கு முன்னர், தேர்தல் குறித்து முறைப்பாடு பதிவு செய்யச் சென்றபோது திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 'அமைதி போராட்டங்களை' ஏற்பாடு செய்ய மாநகர முதல்வர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## நியூஸிலாந்தில் ஏழு பேருக்கு புதிதாகக் கொரோனா தொற்று!



நாட்டின் மிகப் பெரிய நகரமான அக்லாந்து முடக்கப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 7 பேரில் ஆறு பேர் சமூக தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர் என வெலிங்டனில் இன்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சுகாதார பணிப்பாளர் அறிவித்தார்.

1.7 மில்லியன் மக்கள் வசிக்கும் அக்லாந்தில் கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு முடக்க நிலை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நேற்று வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 12 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் தடுத்துவைப்பு கிரெம்லினில் போராட்டம்



ஜனாதிபதி விளாடிமிர் புடின் உள்ளூர் அரசியலுக்குள் அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று சனிக்கிழமை ர;ய தூர கிழக்கு நகரமான கபரோவ்ஸ்கில் சுமார் 2 ஆயிரம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மொஸ்கோவிலிருந்து கிழக்கே 6 ஆயிரத்து 110 கிமீ தொலைவில் உள்ள கபரோவ்ஸ்கில் வசிப்பவர்கள், பிராந்தியத்தின் ஆளுநரான செர்ஜி ஃபுர்கலை தடுத்து வைத்திருப்பதை எதிர்த்து தொடர்ச்சியாக ஆறாவது வாரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொலைக் குற்றச்சாட்டு தொடர்பாக ஜூலை 9 ஆம் திகதி ஆளுநர் ஃபுர்கல் கைது செய்யப்பட்டார். இருப்பினும் அவரது ஆதரவாளர்கள் அவரது கைது மற்றும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளமை அரசியல் நோக்கம் கொண்டது எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் 'ஃபர்கலுக்கு சுதந்திரம்' என பொறிக்கப்பட்ட பல வாசகங்களைக் கொண்ட பாதாதைகளை ஏந்தி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# கொரோனா வைரஸ் முடக்கத்தால் தென்னாபிரிக்க குற்றவீதம் வீழ்ச்சி!

முடக்கநிலை அமுலில் இருப்பதன் காரணமாக முதல் மூன்று மாதங்களில் தென்னாபிரிக்காவில் குற்றங்கள் 40 வீதம் வரை குறைந்துவிட்டதாக அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் பாலியல் வன்முறை மற்றும் எரியூட்டல் உள்ளிட்ட பெரும்பாலான குற்றங்கள் குறைந்துவிட்டன என பொலிஸ்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இருப்பினும் கொரோனா வைரஸ் முடக்கநிலையின் போது மதுபானம் மீதான தடை விதிக்கப்பட்டதால் மதுபானக் கடைகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

உலகின் மிக அதிகமான குற்ற விகிதங்களில் முன்னிலையில் உள்ள தென்னாபிரிக்காவில் கொரோனா தொற்றினால் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 11 ஆயிரம் இறப்புகள் பதிவாகியுள்ளன.

கடந்த மாதம், தென்னாபிரிக்க பொலிஸ் சேவை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான நாட்டின் ஒட்டு மொத்த குற்ற புள்ளிவிவரங்களை வெளியிட்டது.




கடந்த ஆண்டில் ஒட்டுமொத்தமாக, கார் திருட்டு, சொத்துக்களின் கொள்ளை மற்றும் கொலைகள் அனைத்தும் அதற்கு முந்தைய ஆண்டை விட அதிகரித்திருந்தன.

அத்தோடு பாலியல் குற்றங்கள், போதைப்பொருள் பாவனை, சட்ட விரோதமாக வாகனம் ஓட்டுதல், சட்ட விரோத துப்பாக்கிகளை வைத்திருத்தல் போன்றவையும் அதிகரித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

## இஸ்ரேலுடனான ஒப்பந்தத்தில் எமிரேட்ஸ் தவறிழைத்துள்ளது!



இஸ்ரேலுடனான உறவை இயல்பாக்குவதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதில் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் ஒரு 'மிகப்பெரிய தவறு' செய்துள்ளது என ஈரானின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இன்று (சனிக்கிழமை) தொலைக்காட்சியில் உரையாற்றியபோதே ஹசன் ரௌஹானி இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு 'பிராந்தியத்தில் காலடி' வைக்க அனுமதிப்பதை எதிர்த்து வளைகுடா அரசையும் ஹசன் ரௌஹானி எச்சரித்தார்.

வியாழக்கிழமை அறிவிக்கப்பட்ட ஐக்கிய அரபு இராஜ்ஜிய மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான ஒப்பந்தம் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் பிராந்திய மற்றும் உலகளாவிய நிலைப்பாட்டுக்கு ஊக்கமாகக் கருதப்படுகிறது.

# தனிமைப்படுத்தும் நடவடிக்கையினால் பிரான்ஸிலிருந்து பிரி.செல்லும் மக்கள்!

பிரான்ஸிற்கு விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்காக விடுமுறையை கழிக்க பிரான்ஸிற்கு சென்ற ஆயிரக்கணக்கானவர்கள் மீண்டும் பிரித்தானியா திரும்பியுள்ளனர்.

சனிக்கிழமை முதல் நெதர்லாந்து, மொனாக்கோ, மால்டோ, துருக்கியர்கள் மற்றும் கைகோஸ் மற்றும் அருபாவிலிருந்து வரும் மக்களுக்கு 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தல் நடவடிக்கை நடைமுறைக்கு வந்தது.

சனிக்கிழமையன்று கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தவுடன் இங்கிலாந்திற்கு அத்தியாவசிய பயணங்களை மேற்கொள்பவர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் எதிராக நெதர்லாந்து எச்சரிக்கை விடுத்திருந்த போதும் பரஸ்பர நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தாது என்றும் அந்நாட்டு அரசாங்கம் கூறியது.

ஏழு நாள்களில் ஒரு லட்சம் மக்கள் நோய்த்தொற்று விகிதம் 20 ஐ தாண்டியதால் குறித்த நாடுகளுக்கு தனிமைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதாக போக்குவரத்து செயலாளர் கிராண்ட் ஜூப்ஸ் கூறினார்.

பிரான்ஸில் பிரித்தானியாவைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் விடுமுறையைக் கழிக்க வந்தவர்கள் இருக்கின்றனர் என வெள்ளிக்கிழமை பி.பி.சி.யின் பிரத்தியேக செவ்வியில் கிராண்ட் ஜூப்ஸ் தெரிவித்திருந்தார்.



# வெளிநாடுகளில் சிக்கிய 309 பேர் நாடு மீண்டனர்!

கொழும்பு,ஓக.15

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையில் வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 309 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

லெபனான் பெய்ரூட் நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கி பயணித்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குள் சொந்தமான யு.எல் 1506 எனும் விமானத்தின் ஊடாக 245 இலங்கையர்கள், இன்று (சனிக்கிழமை) காலை 7.30 மணியளவில் நாட்டை வந்தடைந்தனர்.

இதேவேளை அபுதாபியில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கி பயணித்த எதிகாட் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.வை. 264எனும் விமானத்தின் ஊடாக 40 இலங்கையர்கள் நேற்று இரவு 11.35 மணி அளவில் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அதேபோன்று கட்டார் – தோஹா நகரில் இருந்து பயணித்த இரண்டு விமானங்கள் ஊடாக 11 இலங்கையர்களும் இந்தியாவின் மும்பை நகரில் இருந்து பயணித்த ஸ்ரீலங்கன் விமானசேவைக்குச் சொந்தமான யு. எல் 1042 எனும் விமானம் ஊடாக 13 இலங்கையர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

இந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு முகாமைத்துவ வணிக பீடாதிபதி தெரிவு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் புதிய பீடாதிபதியாக பேராசிரியர் பாலசுந்தரம் நிமலதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடச் சபையில் அவர் இன்று (ஞாயிற்றுக் கிழமை) தெரிவு செய்யப்பட்டார்.

கணக்கியல் துறை பேராசிரியரான இவர், 38ஆவது வயதில் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறந்த மற்றும் தொலைக் கல்வி அலகின் பணிப்பாளரும் கணக்கியல் துறையின் பேராசிரியருமாக பாலசுந்தரம் நிமலதாசன், மிகக் குறைந்த வயதில்; பேராசிரியராகத் தெரிவாகியவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிக பட்டதாரியான அவர், ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகவும் பங்களாதேஷ் சிட்டாக்கோங் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2005ஆம் ஆண்டு விரிவுரையாளராக தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்த பாலசுந்தரம் நிமலதாசன், 2010ஆம் ஆண்டில் முதுநிலை விரிவுரையாளராகவும் 2015ஆம் ஆண்டில் பேராசிரியராகவும் திகழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றாளர் இலங்கையில் அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 886 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாத்திரம் 4பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய மேலும் 3 பேருக்கும், ஜப்பானில் இருந்து இலங்கை வந்த ஒருவருக்கும் இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 12 பேர் பூரண குணமடைந்து நேற்று வீடுகளுக்குத்திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாகக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 658 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, வைரஸ் தொற்றால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவரம்

## வெளியாகியது வர்த்தமானி

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானியில் ரஞ்சித் மத்துமபண்டா, திஸ்ஸ அத்தநாயக்க, இம்தியாஸ் பாகிர் மாகர், இரான் விக்ரமசிங்க, ஹரின் பெர்ணாண்டோ, மயந்த திஸாநாயக்க மற்றும் டயனா கமகே ஆகியோரே தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மேலும், தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பேராசிரியர் ஹரினி அமரசூரியகே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் தேசிய பட்டியல் ஆசனம் தொடர்பாக சர்ச்சை நிலவியது.

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் தமது கட்சிகளுக்கும் ஒவ்வொரு ஆசனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்தில் வலியுறுத்தியிருந்த போதிலும் பின்னர் இறுதி தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பை தலைமைத்துவத்திடமே ஒப்படைத்திருந்தன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைத் தவிர ஏனைய பிரதான கட்சிகளில் தேசிய பட்டியல் விவகாரம் இழுபறி நிலையில் காணப்பட்டது. எனினும் தற்போது பிரதான கட்சிகள் அனைத்தும் அதற்கு தீர்வு கண்டுள்ள போதிலும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி மாத்திரம் இதுவரையில் விவரத்தை அறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ராஜாங்க அமைச்சு பதவியை விஜயதாச வகித்தவரல்லராம்

ஒரு போதும் தான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியை தவிர ராஜாங்க அமைச்சு பதவியை வகித்ததில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவை தொலைபேசியில் தொடர்புக்கொண்டு அவர் இதனை கூறியுள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷவுக்கு உயர்கல்விராஜாங்க அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிந்து கொண்ட பின்னர் அவர் அதனை ஏற்கவில்லை. ஜனாதிபதியின் ஆலோசகரை தொடர்புகொண்டு மேற்படி விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜாங்க அமைச்சர்களுக்கான எந்த நிறுவனமும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரப்படவில்லை எனவும் விஜயதாச ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

தனக்குப் பொய்யான



அமைச்சு பதவிகள் தேவையில்லை எனவும் அப்படியான அமைச்சு பதவிகளைத் தான் பெற்றுக்கொள்வதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் புதிய ஆட்சிப்பீடத்தை உன்னிப்பாகக் கவனிக்கிறது இந்தியா

## அந்நாட்டுப் பத்திரிகை தகவல்

இலங்கைப் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு குடும்ப அதிகாரத்தை பலப்படுத்திய பின்னர் புதுடெல்லியின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் எந்தவொரு நடவடிக்கை குறித்தும் இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இந்தத் தகவலை இந்திய செய்தித்தாளான எகனாமிக் டைம்ஸ் வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ராஜபக்ஷகள் பாரம்பரியமாக சீனர்களுடன் நெருக்கமாக இருந்தபோதிலும், பிரதமரின இளைய சகோதரரான ஜனாதிபதி கோட்டபயா, 2019 இல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இந்திய நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுப்பதை இதுவரைத் தவிர்த்துவிட்டார்.

இருப்பினும், அனைத்து கண்களும் இப்போது மூத்த ராஜபக்ஷவின் மீது உள்ளதாக எக்கானமிக் டைம்ஸ் கூறியுள்ளது. ஏற்கனவே அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பெய்ஜிங்குடன் உறவுகளை வலுப்படுத்திக் கொண்டார் என்பதன் அடிப்படையிலேயே இந்த விடயத்தை இந்தியா கவனித்து வருவதாக அந்த செய்தித்தாள் கூறுகிறது.

சீனா இந்தியப் பெருங்கடலுக்கு தனது ஒரு நங்கூரமாக இலங்கையை உருவாக்க விரும்புகிறது,

ஹம்பாந்தோட்டை துறைமுகம் முதல் இலங்கை கடலில் உள்ள சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் வரை இந்தியாவுக்கு பாதுகாப்பு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் இலங்கை சீனாவுடனான உறவுகளை நீர்த்துப்போகச் செய்யும் என்று இந்தியா எதிர்பார்க்கவில்லை,எனினும் புது டெல்லியின் பாதுகாப்பு நலன்களைக் குறை மதிப்பிற்கு உட்படுத்துவதற்காக மிகப்பெரிய தேர்தல் ஆணையை அடிப்படையாகக் கொண்ட எந்த நடவடிக்கையும் மஹிந்தவின் அரசாங்கம் இன்னும் தொடங்கவில்லை என்பதைப் பார்க்கமுடிகிறது" – என்று எகனாமிக் டைம்ஸ் கூறுகிறது.

இலங்கையின் தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே பிரதமர் நரேந்திர மோடி மஹிந்த ராஜபக்ஷவை வாழ்த்தி செய்தியை அனுப்பிவிட்டார். அத்துடன் இலங்கைக்கான இந்திய உயரஸ்தானிகர் கோபால் பாக்லே, எதிர்கால ஒத்துழைப்புத் திட்டங்கள் குறித்து விவாதிக்க புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரை சந்தித்த முதல் வெளியுறவு இராஜதந்திரியாக இடம்பெற்றிருந்தார்.

கடந்த வாரம் கோவாவில் உள்ள இந்திய கடற்படைத் தளம் இலங்கை விமானப்படை விமானத்தை பழுதுபார்த்தது. இது கொழும்பில் பெரும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது என்றும் எகனாமிக் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் சீன தூதரக அதிகாரிகள், இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் மூடிய கதவு, திரைக்குப் பின்னால் கூட்டங்களை நடத்தினர் என இந்திய செய்தித்தாள் கூறுகிறது. 2015 ஆம் ஆண்டில் இலங்கையிலும், பின்னர் 2018 ஆம் ஆண்டில் மாலைதீவிலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டபோது பெய்ஜிங் ஆச்சரியத்தில் மூழ்கியது.

இதனையடுத்து இலங்கையில் சக்திவாய்ந்த புத்த மதகுருக்களுக்கு ஊக்கமளிக்க சீனா முடிவு செய்தது என்றும் இந்திய எகனாமிக் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

# புதிய அரசின் கொள்கை வியாழனன்று அறிவிப்பு

புதிய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்க உள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையினை எதிர்வரும் வியாழக்கிழமை 9 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்க உள்ளார்.

தொடக்கக் கூட்டத் தொடருக்கு பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி தலைமை தாங்குவார். மேலும் அரசியல் அமைப்பின் 33 (2) வது பிரிவில் வழங்கப்பட்டுள்ளபடி புதிய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை முன் வைப்பார்.

இதேவேளையில், புதிய நாடாளுமன்றம் அதே நாளில் காலை 9.30 மணிக்கு கூடும். அதன் பின்னர் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார். உறுப்பினர்கள் பதவி ஏற்பார்கள். பின்னர் துணை சபாநாயகர் மற்றும் குழுக்களின் துணைத் தலைவர் நியமிக்கப்படுவார்கள். பின்னர் சபாநாயகர் பிற்பகல் 3.00 மணி வரை நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நல்லூரில் இன்று...











**யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 22 ஆம் நாளான இன்று காலை தெண்டாயுதபானி உற்சவம் மிக பக்திபூர்வமாக இடம்பெற்றது.**

**படங்கள் - ஐ.சிவசாந்தன்**

# மடு அன்னையின் ஆவணி திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது!

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி திருவிழா இன்று (சனிக்கிழமை) காலை சிறப்பாக இடம்பெற்றது.

கண்டிமறைமாவட்டஆயர்வியானிபெர்னாண்டோ தலைமையில் காலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் றேமன் விக்கிரம சிங்க, அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச் சொரூப பவணி இடம்பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தத் திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரதி நிதிகள், திணைக்களத் தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மடு அன்னையிடம் ஆசி பெற்றனர்





# வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 154 பேர் வீடுகளுக்குத் திரும்பினர்!

டுபாயில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 154 பேர் இன்று (சனிக்கிழமை) வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில், அவர்களது சொந்த இடங்களான கம்பஹா, கொழும்பு, கண்டி, கேகாலை, திருகோணமலை, களுத்துறை போன்ற பகுதிகளிற்கு பேருந்துகள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தப் பயணிகளுக்;கான பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கொரோனா தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்களை நாட்டுக்;கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் கடந்த 3 ஆம் திகதி டுபாயிலிருந்து அழைத்துவரப்பட்ட பயணிகள் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கைக்குண்டுகளுடன் ஒருவர் இரத்தினபுரியில் கைதானார்!

இரத்தினபுரி – கரந்தன்கொட பகுதியில் கைக்குண்டுகளுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 23 வயதானவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சு.கவுக்கு புதிய தலைமைத்துவம் அவசியம் என்கின்றார் சந்திரிகா

கொழும்பு, ஓக.15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதியத் தலைமைத்துவமொன்று அவசியம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தான் தயாராக உள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -



ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட குழப்பகரமான அரசமைப்புக்கு இணங்க, அறிமுகப் படுத்தப்பட்ட தேர்தல் முறைமையினால், இன்று தனி ஒரு கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்துள்ளது.

இதனைப் பாரிய வெற்றியாக அந்தத் தரப்பினர் இன்று கொண்டாடி வருகிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளை விட இரண்டு லட்சம் வாக்குகள் இந்தத் தேர்தலில் அந்தத் தரப்புக்கு குறைவடைந்துள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது, தேர்தல் முறைமையினால்தான் அவர்களுக்கு கிடைத்தது. அத்தோடு, எதிர்க் கட்சி இன்று முழுமையாகப் பலமிழந் துள்ளது.

இந்த நாட்டின் பெரிய ஜனநாயகக் கட்சிகள் இரண்டும் இன்று அழிவடைந்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கு என்று இன்னமும் நான் தேடிக்கொண்டிருக் கிறேன். அதேபோன்று, ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று துண்டு துண்டுகளாக சிதைவடைந்துள்ளது.

70 வருடங்களுக்கு மேல் வரலாறு கொண்ட இந்த கட்சிகள் இரண்டும் காணாமற்போயுள்ளன. ராஜபக்ஷ வின் அரசியல் கொள்கைகளை நாம் என்றும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர் சக்திமிக்கதொரு தலைவர் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

அவருக்கு ஏற்ற வகையிலான பலமான ஒரு எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் இன்று நாட்டில் இல்லை என்பது தான் உண்மையாகும்.

சுதந்திரக் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை யை நினைத்து நான் மிகவும் வருந்துகிறேன். நாம் அன்று கூட்டணிகளை அமைத்தோம். அன்று ஒரு கொள்கைக்கு அனைவரும் இணங்கினோம். ஆனால், இன்று எமது கொள்கைக்கு முற்றிலும் முரணாக பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்துள்ளோம்.

சுதந்திரக் கட்சியினருக்கு அமைச்சுப் பதவிகள் கூட வழங்கப்படவில்லை. சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் இன்றும் இலங்கையில் இருந்துக் கொண்டுதான் இருக் கிறார்கள்.

தற்போது இந்தக் கட்சியை மறுசீரமைக்கும் காலம் வந்துள்ளது. இதற்கான வேலைத்திட்டமொன்றை ஸ்தாபிக்க வேண்டும்.

புதிய தலைமைத்துவமொன்று சுதந்திரக் கட்சிக்கு அவசியமாகிறது. இதற்கான முழுமையான ஒத்துழைப் பினை வழங்க நான் என்றும் தயாராகவே இருக்கிறேன். -என அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாமலின் ஆதிக்கத்தில் ஏழு அரச நிறுவனங்கள்

புதிய அமைச்சரவை யில் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக நிய மிக்கப்பட்ட நாமல் ராஜ பக்ஷவின் ஆதிக்க வரம் பின் கீழ் 7 அரச நிறுவ னங்கள் கொண்டுவரப்பட் டுள்ளன.

விளையாட்டு அபிவி ருத்தி திணைக்களம், தேசிய இளைஞர் சேவை கள் மன்றம், தேசிய இளை ஞர் படையணி, இலங்கை தேசிய இளைஞர் சேவை கள் கூட்டுறவு நிறுவகம், தலைமைத்துவ அபிவி ருத்திக்கான தேசிய நிலை யம், மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக் களம், ஸ்மார்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் ஆகிய நிறுவ னங்களே அமைச்சர் நாம லின் கீழ் உள்ளன.

1986ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி பிறந்த நாமல் ராஜபக்ஷவின் முழுப்பெயர் மஹிந்த ராஜபக்ஷ லக்ஸ்மன் நாமல் ராஜபக்ஷ என்ப தாகும். இலங்கையின் அமைச்சரவை வரலாற்றில் வயதில் குறைந்த அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் ஒருவ ராக 34 வயதுடைய நாமல் ராஜபக்ஷ திகழ்கின்றார்.

ஆனாலும், இலங் கையில் மிக இளவயது அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர் என்ற பெருமை தற்போது இரா ஜாங்க அமைச்சராக உள்ள துமிந்த திஸா நாயக்கவையே சேரும். 2013ஆம் ஆண்டு ஜன வரி மாதம் கல்விச் சேவை கள் அமைச்சரவை அமைச்சராக அவர் நிய மிக்கப்பட்டபோது அவ ருக்கு 33 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளராகக் களமிறங்க திகா 2 கோடி ரூபா கேட்டார்

### திலகர் பரபரப்புத் தகவல்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்க வேண்டுமானால் 2 கோடி ரூபா அவசியம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் குறிப்பிட்டார் என்று அச்சங்கத்தின் உறுப் பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தெரிவான மூவரில் இருவர் 'கலாநிதிகள்' எனவும் அவர் எள்ளி நகையாடினார்.

பொதுத்தேர்தலில் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. தேர்தலில் செலவழிப்பதற்கு என்னிடம் பணம் இல்லை எனக் கூறப்பட்டது.

என்னால் 10 லட்சம் ரூபா வரை செலவழிக்கக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால், மேசையில் 2 கோடி ரூபா வைத்தால் வாய்ப்பு வழங்கப்படும் எனத் திகாம்பரம் கூறினார். எதற்காக அந்தப் பணம் என தெரியவில்லை எனவும் திலகர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக் திக்கே தான் வாக்களித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சிறை அதிகாரியின் திருமணத்துக்கு

# 100 விஸ்கி போத்தல்கள் வழங்கினார் வெலே சுதா

மரண தண்டனை விதிக்கப்பட்டு பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னன் வெலே சுதாவினால், அந்தச் சிறையின் பொறுப்பதிகாரியின் திருமண நிகழ்வுக்கு 100 விஸ்கி ரக மதுப் போத்தல்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - வெலிக்கடைச் சிறைச்சாலையில் வெலே சுதா தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் பூஸா சிறைக்கு மாற்றப் பட்டார்.

இவ்வாறு மாற்றப்பட்டு சில வாரங்களில்தான் மேற் படி சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது என ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் குறித்து புலனாய்வுப் பிரி வும், சிறைச்சாலை விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவும் துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

## அரச கட்டடங்களிலேதான் இனி அமைச்சுகள் இயங்கும்

### வருடம் ஆயிரம் கோடி ரூபாவை இதனால் மீதப்படுத்த முடியுமாம்

தனியார் கட்டடங்களில் இயங்கும் அமைச்சுக்கள் மற் றும் அரச நிறுவனங்களை அரச கட்டடங்களுக்கு மாற்று வதற்கு நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ ஆலோசனை வழங்கி யுள்ளார்.

இதன் மூலம் வருடத்திற்கு ஆயிரம் கோடி ரூபாயை விடவும் அதிக பணம் மீதப்ப டுத்த முடியும் என எதிர்பார்க் கப்படுகிறது.

அதற்கமைய புதிய அர சாங்கத்தின் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை அரசாங்கத்திற்கு சொந்த மான கட்டடங்களில் முன் னெடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங் கத்தினால் விவசாய அமைச் சிற்காக பெற்றுக் கொள்ளப் பட்ட தனியார் கட்டடத்திற்கு பதிலாக விவசாய அமைச் சிற்காக நிர்மாணிக்கப்பட் டுள்ள விவசாய மாளிகைக்கு அந்த அமைச்சைக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தலையிட்டு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதே முறையில் தனியார் கட்டடங்களில் இயங்கும் 30 அரச அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் அரச கட்ட டங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

# நல்லூர்த் தேருக்கு ஆலயத்தில் ஒன்று திரள்வதைத் தவிருங்கள்!

## அரச அதிபர் விநயமான வேண்டுகோள்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.15

நாட்டில் நிலவும் கொரோனா நெருக்கடி நிலைமை யினைக் கருத்தில் கொண்டு நல்லூர் தேர் உற்சவத் திற்கு அடியவர்கள் அதிகளவில் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கோரியுள்ளார்.

நாளை மறுதினம் நல்லூர் ஆலய தேர் உற்சவம் மிகவும் விமரிசையாக இடம்பெறவுள்ள நிலையில் தற்போது உள்ள கொரோனா நிலைமையினை கருத்திற் கொண்டு மக்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. இரதோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் 18 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் நல்லூர் கந்தனை தரிசிப்பதற் குத் தற்பொழுது பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வருகை தருவதனை நாங்கள் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சுகாதாரப் பகுதியினர் அதே போன்று பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவின ரும் ஆலய நிர்வாகத்தினரும் சுகாதார அறிவுறுத்தல் களைப் பக்தர்களுக்கு வழங்கியுள்ளனர். அந்த அடிப்படையிலே சுகாதார நடைமுறைகளை பேணி சமூக இடைவெளியை பின்பற்றி சகல பக்தர்களும், பாதுகாப்புடன் உற்சவங்களில் கலந்து கொள்வதற்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நல்லூர் கந்தனுடைய திருவிழாவில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் ஒன்று கூடி நிற்கின்ற இடமாகும். ஆகவே இந்த கொரோனா சூழ்நிலையை கருத்தில் கொண்டு பக்தர்கள் இந்த சூழ்நிலையை அனுச ரித்து செயற்பட வேண்டிய கடப்பாடு உள்ளது.

கூடுமானவரை வீடுகளிலிருந்தே ஆலயத் தேர் உற்சவத்தின் கண்டுகளிக்க முடியும். எனவே பக்தர் கள் இந்த விடயத்தினை கருத்தில் எடுத்துக் கொள் ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏனெனில் யாழ் மாவட்டத்தில் கொரோனா சூழ் நிலையினை மிகவும் கட்டுப்படுத்தி மிகவும் உச்சபட் சமாக இதனைக் குறைத்து உங்களைப் பாதுகாத் துள்ளோம். இந்த சூழ்நிலையிலே சமூகத்தில் ஒவ் வொரு தனி மனிதனின் பாதுகாப்பை உறுதிபடுத் தும் முகமாக செயற்பட வேண்டியது ஒவ்வொருவரு டைய கடமையாகும். எனவே இந்த தேர்த்திருவிழா உற்சவத்தில் பக்தர்கள் அதிகளவில் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின் றேன். - என்றார்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2020 இல் வெளியிடப்பெற்றது.